DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 99/2019**

Deposition of Witness: CW1.

| | | | |
|---|---|---|---|
| Name | பாலமுருகன் | Father Name – | துரைச்சாமி |
| Age | 52 | Village – | அல்லிநகரம் |
| | | Taluk – | தேனி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.06.2026.

**நீதிமன்ற விசாரணை.**

1. நான் தற்போது போடிநாயக்கனூர் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன். போடிநாயக்கனூர் மண்டல துணை வட்டாட்சியர் பொறுப்பையும் கூடுதலாக பார்த்து வருகிறேன். தேனி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்கள் கொடுத்த அனுமதி கடிதத்தின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். வழக்குரை சொத்திற்கான SLR பதிவேடு சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.1** ஆகும், வழக்குரை சொத்திற்கான புல வரைபடம் **சா.சா.ஆ.2** ஆகும், வழக்குரை சொத்திற்கான UDR க்கு முந்தைய அ–பதிவேடு சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.3** ஆகும்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.1 SLR பதிவேட்டில் பட்டா எண்.1331ல் வேலாயுதம் பிள்ளை பெயர் சர்வே எண்.344/14ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேலாயுதம் பிள்ளை பெயருடன் சேர்த்து வேறு சில நபர்கள் பெயரும் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.344/14 என்பது SLR பதிவேட்டில் பட்டா நிலமாக தான் உள்ளது என்றால் சரிதான். UDR க்கு பின்பு ஏற்பட்ட ஆவணங்களில் தான் சர்வே எண்.344/14 என்பது களமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அதற்கு முன்பே களம் என காட்டப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு பட்டா நிலத்தை சர்க்கார் புறம்போக்காகவோ, களமாகவோ, நத்தம் புறம்போக்காகவோ அல்லது அனாதினமாகவோ மாற்றுவதற்கு முன்பு பட்டாதாரர்களுக்கு முறையாக அறிவிப்பு வழங்கி தான் மாற்றம் செய்ய முடியும் என்றால் சரிதான்.

2. சர்வே எண்.344/14 க்கு கட்டுப்பட்ட சொத்தை களம் என வகைப்படுத்துவதற்கு முன்பாக பட்டாதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கி, உத்தரவு பிறப்பித்து சுவாதீனத்தை

எடுத்தற்குரிய எந்த ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அது சம்மந்தமான ஆவணங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருக்கிறதா என்பதை சரிபார்த்துவிட்டு தாக்கல் செய்கிறேன். சர்வே எண்.344/14 களமாக எந்த தேதியில் மாற்றப்பட்டது என்றால் 06.06.1964 ம் தேதி மாற்றப்பட்டது. பொதுவாக ஒரு நிலத்தை சர்க்கார் புறம்போக்காகவோ, களமாகவோ, நத்தம் புறம்போக்காகவோ அல்லது அனாதினமாகவோ மாற்றம் செய்யும்போது அதற்கான அரசாணைகளை வெளியிட்டு அந்த அரசாணையை பதிவுத்துறை அலுவலகத்திற்கு அனுப்புவோம் என்றால் சரிதான்.

3. சர்வே எண்.344/14 என்பது சர்க்கார் புறம்போக்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அதன் மதிப்பை பூஜ்ஜியம் என மாற்றம் செய்ய வேண்டும் என பதிவுத்துறை அலுவலகத்தில் கடிதம் எதுவும் அனுப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.344/14 க்கு குறித்து பதிவுத்துறை அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பியிருந்தால் சர்வே எண்.344/14 ன் மதிப்பு பூஜ்ஜியம் என்று தான் இருந்திருக்கும் என்றால் சரிதான். 1964 ம் ஆண்டு அரசுபுறம்போக்கு நிலமாக மாற்றப்பட்டுள்ள நிலையில் எதன் அடிப்படையில் அடங்கல் கணக்குகளில் சர்வே எண்.344/14 ல் வீடுகள் மற்றும் கோவில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அரசாங்க நிலத்தில் வீடுகள் மற்றும் கோவில் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்தால் அடங்கல் கணக்கில் அது காட்டப்படும்.

4. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் ஆக்கிரமிப்பு என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சர்க்கார் புறம்போக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு சர்க்கார் புறம்போக்கு இடத்தில் ஒருவர் 30 வருடங்களுக்கு மேலாக அனுபவத்தில் இருந்தால் அவருக்கு Adverse Possession மூலம் அந்த இடத்தில் உரிமை வந்து விடும் என்றால் சரிதான். சர்வே எண்.344/14 க்கு கட்டுப்பட்ட சொத்தை பொறுத்து 1968 முதல் 2002 வரை பதிவு ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு மேற்படி பதிவு ஆவணங்களை ரத்து செய்ய அரசு எதுவும் நடவடிக்கை எதுவும் எடுத்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குரை சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், அரசாங்கத்தால் சட்ட விரோதமாக வழக்குரை சொத்து சர்க்கார் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், வாதிகளின்

அனுபவத்திலும் பாத்தியத்திலும் இருந்து வரும் வழக்குரை சொத்தை அரசு அவசியத்தேவைக்கு கையகப்படுத்த வேண்டும் என்றால் நில ஆர்ஜிதம் செய்து தான் கையகப்படுத்த முடியும் என்றால் சரியல்ல.

5. சர்வே எண்.344/14 க்கு கட்டுப்பட்ட சொத்திற்கு அருகில் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பூங்கா உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குரை சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டநிலம் என்றும், நான் அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**சாட்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழக்குரை சொத்து சம்மந்தமான கோப்புகளை பார்வையிட்டு எதன் அடிப்படையில் 06.06.1964 ம்தேதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என சரிபார்த்துவிட்டு 02.07.2026 ம் தேதி ஆவணங்களை சமர்ப்பிப்பதாக கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் விசாரணை 02.07.2026 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது.**

Take down by me in the open Court and read over to the witness admited by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.06.24 16:51:23 +0530

District Munsif,
Bodinayakanur.